சுருக்கம்

ஆசிரியர் பயிற்சி – மாவட்ட கல்வி பயிற்சி நிறுவனம், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் அரசு நிதி உதவி பெறாத சிறுபான்மை/ சிறுபான்மையல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 2007–2008 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை சார்ந்து பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் – வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (பரி) துறை

அரசாணை (நிலை) எண்:108

நாள்:17.05.2007.

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (டி) எண்.111, பள்ளிக் கல்வித் (பரி) துறை நாள்:17.07.2003.
2. அரசாணை (2டி) எண்.59, பள்ளிக் கல்வித் (பரி) துறை நாள்:14.11.2006.
3. அரசாணை (2டி) எண்.7, பள்ளிக் கல்வித் (பரி) துறை நாள்: 09.02.2007.
4. சென்னை உயர்நீதிமன்றம் 47503/2006 மற்றும் இதர பல தொடர் வழக்குகளில் 03.04.2007 அன்று அளித்த தீர்ப்பாணை.
5. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித எண்.5680/இ2/07, நாள்: 23.04.2007, 27.4.2007, 30.04.2007 மற்றும் 10.05.2007.

---

ஆணை

அரசாணை (டி) எண்.111, பள்ளிக் கல்வித் துறை நாள்: 17.07.2003–ல் மாவட்ட ஆசிரிய கல்வி பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாதோர் மற்றும் உதவி பெறாத சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் 2003–2004 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர்கள் சேர்க்கை சார்ந்து பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் குறித்து விரிவான ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும் மேற்கண்ட அரசாணையில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கு வகுக்கப்பட்ட நெறிமுறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தேவைப்பட்டாலொழிய இனிவரும் ஆண்டுகளில் இந் நெறிமுறையையே தொடர்ந்து கடைப்பிடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அரசாணையில் வழங்கப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றியே இதுவரை அனைத்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

2. தென்மண்டல தேசிய ஆசிரியர் கல்வி குழுமம், 2004–2005 ஆம் கல்வியாண்டு தொடங்கிய பின்னரும், ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வு முடிவுற்ற பிறகும் பல தனியார் நிறுவனங்களுக்கு 2004–2005 ஆண்டிற்கு அங்கீகாரம் வழங்கியது. இந்நிலையில் சில தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் செப்டம்பரில் நடைபெற்ற மேல்நிலைக் கல்வி தேர்வில் (+2) தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கூட ஆசிரியர் பயிற்சியில் சேர்த்தனர். இந்நிலை

மாணவர்களது சேர்க்கைப் பட்டியலுக்கு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால் ஒப்புதல் மறுக்கப்பட்டதால், மாணவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் நிலை ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு அரசு உதவி பெறும் மற்றும் உதவி பெறாத தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 2004–2005 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளில் நிர்வாக ஒதுக்கீடு மாணவர் சேர்க்கையில் செப்டம்பர் மாத 2 தேர்வில் தேர்ச்சி பெற்ற போதுமான வருகை நாட்கள் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மட்டும் சேர்க்கை பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பின்னர் மேலே பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் தென் மண்டல தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தால் 2006–2007 கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட தனியார் சுயநிதி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கான கடைசி தேதி 30.11.2006 என்றும் ஆசிரியர் பணியாளர்கள் பட்டியல் ஒப்புதல் வழங்க முடிவான தேதி 20.11.2006 என்றும் ஆணை வழங்கப்பட்டது. இவ்வரசாணையை எதிர்த்து பல தனியார் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். ரிட் மனுக்கள் நிலுவையில் இருந்த நிலையில், மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஆசிரியர் பணியாளர் பட்டியல் ஒப்புதல் பெறுவதற்கான கால நீட்டிப்பு 09.03.2007 முடிய என குறிப்பிட்டு ஆணை வழங்கப்பட்டது.

3. சென்னை உயர்நீதிமன்றம் அனைத்து ரிட் மனுக்களையும் ஒன்றாக விசாரித்து 03.04.2007 அன்று தீர்ப்பு வழங்கியது. நீதிமன்ற தீர்ப்பினை கருத்தில் கொண்டு, வரும் 2007–2008ஆம் கல்வியாண்டு முதல் கால அட்டவணைப்படியும், ஆசிரியர் பட்டயப் பயிற்சி செயல்பாடுகளுக்கான கால அளவினை (Calendar of Activities) வரையறை செய்தும், நீதிமன்றத் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்ட இதர விவரங்களையும் 2007–2008ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் தக்க வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டு, அதனை அரசு நாளிதழிலும் வெளியிட வேண்டும் என்றும் இவ்வாறு பிறப்பிக்கப்படும் ஆணைகள் 2007–2008 ஆம் கல்வியாண்டு முதல் பின்பற்றப்படுவதோடு மட்டுமின்றி குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தேவைப்பட்டாலொழிய இனிவரும் கல்வி ஆண்டுகளிலும் இந்த நெறிமுறையை தொடர்ந்து கடைப்பிடிக்கலாம் என்றும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கருத்தினை நன்கு பரிசீலனை செய்து, அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

1. ஒற்றைச் சாளர முறையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களை விரைந்து நிரப்ப சென்னையில் நான்கு மையங்களில் கலந்தாய்வு நடத்திட அனுமதி அளிக்கப்படுகிறது.
2. ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்கு ஜூலை மாதம் முதல் ஜூன் மாதம் வரை உள்ள காலத்தை ஒவ்வொரு வருட கல்வி ஆண்டாகக் கருத வேண்டும்.
3. இணைப்பில் தெரிவிக்கப்பட்ட ஆசிரியர் பட்டயப் பயிற்சி செயல்பாடுகளுக்கான கால அளவினை (Calendar of Activities) மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளை வரும் கல்வியாண்டிலிருந்தே (2007–2008) நடைமுறைப்படுத்தவேண்டும். குறிப்பிட்ட மாற்றங்கள் தேவைப்பட்டாலொழிய இனி வரும் கல்வியாண்டுகளிலும் இந்த நெறிமுறைகளை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.
4. மேலும் 2007–2008ஆம் கல்வி ஆண்டு முதல் உடற்கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர் சேர்க்கையினை, ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி ஒற்றைச் சாளர முறை மாணவர் சேர்க்கைக்கு கடைபிடிக்கும் கால அளவினை பின்பற்றி நடத்தலாம் என்றும் இதற்காக ஏற்படும் செலவினத்தை ஆசிரிய

கல்வி பட்டயப் பயிற்சி ஒற்றைச் சாளர முறை தேர்வுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனவும் ஆணையிடப்படுகிறது.

5. இவ்வாணை தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் (Tamil Nadu Government Gazette Extraordinary) 17.05.2007 அன்று வெளியிடப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை–6.
எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை–2.
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
(அரசாணை (நிலை) எண்.108, நாள்: 17.05.2007–ஐ
தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடுவதற்காக)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.